புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தேம்பாவணி உணர்த்தும் இறை இயல்புகள்

**இரா. பிரேமாவதி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,(பகுதி நேரம்)*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர்- 635 601.*

## முன்னுரை

நம் அன்னை மொழியாம் தமிழுக்கு அரிய தொண்டாற்றியர்கள் பலருண்டு. அவர்களுள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும், பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் உண்டு. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வீரமாமுனிவர் ஆவார். இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக விளங்கிய புனித சூசையப்பரின் வரலாற்றை எடுத்துரைக்கும் தேம்பாவணி காவியத்தில் வாழ்வியல் செய்திகளையும், இறையியல் கருத்துகளையும் எடுத்துரைத்துள்ளார். அவற்றுள் தேம்பாவணியில் உள்ள முதல் பன்னிரண்டு இயல்களில் காணலாகும் இறை இயல்புகள் குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வீரமாமுனிவரின் வாழ்க்கை

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில் உள்ள மாண்டுவா மாவட்டத்தைச் சேர்ந்த காஸ்திக் கிளியோன் என்னும் ஊரில் 1680 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8 ஆம் நாள் பிறந்தார். இவர் தம் பெற்றோர் கொண்டல்போ பெஸ்கி- எலிசபெத் ஆகியோர். இவரது இயற்பெயர் கான்ஸ்டாண்டியுஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்ச், போர்த்துகீசியம் உள்ளிட்ட மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். 1698 ஆம் ஆண்டு அக்டோபரில் தம் முப்பதாம் வயதில் தமிழ் மொழியைக் கற்றுச் செய்யுள், உரைநடை, இலக்கணம், அகராதி போன்ற அனைத்துத் துறை நூல்களையும் படைத்தளித்தார்

## தேம்பாவணி

வீரமாமுனிவர் படைத்த இலக்கியங்களில் சிறப்புற்று விளங்குவது தேம்பாவணியாகும். இயேசுபிரானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டது தேம்பாவணி. 1726 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. தேம்பாவணி மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் 12 படலங்கள் வீதம் மொத்தம் 36 படலங்களைக் கொண்டு 3615 விருத்தப்பாடல்களைக் கொண்டதாகும். இக்காப்பியத்தில் அறம், துறவு, கல்வி, நூல்கள், இறை இயல்பு, சூசையப்பர் மற்றும் மரியாளின் பெருமைகள் முதலான கருத்துகள் நிறைந்து தமிழ் மணம் கமழ்கின்றது.

## இறை வல்லமை

வீரமாமுனிவர் காவியம் இயற்றும் புலவராக மட்டுமின்றி இறையியலில் தம்மை இணைத்துக் கொண்டவர். இறைவன் மீது அளவில்லா பற்று கொண்ட முனிவர் வாய்ப்பு நேரும் தோறும் இறை இயல்புகளை எடுத்துரைத்துள்ளார். "சமயக் கல்வியுடன், தத்துவ சாத்திரங்களையும், வேத சாத்திரங்களின் நுட்பங்களையும் மதி நுட்பத்துடன் ஓதியுணர்ந்தார். இயேசு சபைக் குருவாகப் பயிற்சி பெறும் போது ரவீனா என்னும் ஊரில் ஓராண்டு காலம் இலக்கண ஆசிரியராகப் பணியாற்றினார்" பேராசிரியர் ம.வி.சுதாகர், தமிழ் மொழி வரலாற்றில் வீரமாமுனிவர் (கட்) பக். 121,122 தமிழ் வரலாற்றில் கிறிஸ்தவம். மூன்றாவது படலமாகிய

*வளன் சனித்த படலத்தில் தாவீது கோலியாத்தை வீழ்த்துவான். அப்பொழுது இறைவனின் வலிய கையின் துணைகொண்டு வெற்றி கொள்வேன் என்று கூறுவதாக முனிவர் குறிப்பிடுகிறார்.*

*எல்லை ஆதரவு இயற்று எதிர் இலாத் திறக் கடவுள்*
*வல் கையோடு உனை மாய்;த்து, உடல் புட்கு இரை ஆக*
*ஒல் செய்வேன்'' (வளன் சனித்த .படலம்-28)*

*இதன் மூலம் இறைவன் ஒப்பில்லா வல்லமை கொண்டவர் என்பதும், இறைவனின் துணையோடு தான் வெற்றி கிடைக்கும் என்ற கருத்து உணர்த்தப்பட்டுள்ளது. யுக முடிவில் கரு மேகம் இடியோடு விழுவது போல் கோலியாத் வீழ்ந்துவிட்ட பிறகு, கோலியாத்தின் வாளினை தாவிதன் உருவி, பிலித்தியரை நோக்கி, " என் இறைவன் கொண்டுள்ள வல்லமையை இதன் மூலம் உணர்ந்து கொள்ளுங்கள்'' என்று கூறி அவன் தலையைக் கொய்ததை முனிவர்,*

*" கடை யுகத்தினில் கரு முகில் உருமொடு விழும் போல்,*
*படை முகத்தினில் பார் புதைத்து அஞ்ச வீழ்ந்தனன் தன்*
*புடை அகத்தினில் புணர்ந்த வாள் உருவி, "என் தெய்வம்*
*ஊடை உரத்தினை உணர்மின்''என்று இருஞ்சிரம் கொய்தான்''*
*( வளன் சனித்த படலம்-30)*
*என்று பாடுகிறார். இறைவனின் வல்லமை இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.*

*மனிதனின் சக்தி என்பது ஓர் எல்லைக்கு உட்பட்டதாக அமைந்திருக்கும். ஆனால், உடல் வலிமை மிகுந்துள்ள எதிரியை வீழ்த்தும் போது, இறைவனின் வல்லமை இருந்தால் மட்டுமே வெற்றி கிட்டும் என்ற பெறப்படுகிறது.*
*இறைவனைச் சரணடைதல்*

*சூசையின் இளமைப்பருவத்து மாண்புகளை எடுத்துரைக்கும் பாலமாட்சிப் படலத்தில் சூசை உலப்பொருள்கள் மீது ஆசை கொள்ளாமல் இறைவனின் பாதங்களைச் சரணாகப் பெற்று உயர்ந்த மலையின் நிலையை அடைந்தவன் போல் இருந்தான் என்பதை வீரமாமுனிவர்,*
*கலை உற்று, உள் இருள் நீங்கிய காட்சியான்*
*அலை உற்று இப்பொருளோடு அலையாது உளம்*
*நிலை உற்று, எந்தை நெருங்கு அடி சேர்ந்து, உயர்*
*மலை உற்றான் என மாறுபடான அரோ. (பால மாட்சிப் படலம்-58)*
*எனக் குறிப்பிடுவதிலிருந்து இறைவனின் பாதங்களைச் சரண் அடைந்தவர்கள் பெறுகின்ற உயர்நிலை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கடவுளின் சிறந்த திருவடிகளை இடைவிடாமல் நினைக்கின்றவர்கள் இன்ப உலகில் நிலைத்து வாழ்வார் என்ற கருத்தமைந்த,*
*" மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார் (திருக்குறள்-3)*
*எனும் திருக்குறளோடு ஒப்பக் கருதத்தக்கதாக முனிவரின் கருத்து அமைந்துள்ளது.*

***இறையின் உயர்பண்புகள்***

*இறைவன் அவதரிக்கச் சூசை வேண்டும் போது இறைவனின் பண்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன.*
*" ஒன்றாய் ஆளும் அரசே, என் உயிர்க்கு ஓர் நிலையே, தயைக் கடலே,*
*குன்றா ஒளியே, அருட்பரனே,....'' (திருமணப் படலம்-17)*

*எனும் இப்பாடலில், இறைவனை, உலகங்களையெல்லாம் ஒன்றாய் நின்று ஆளும் அரசன், தன் உயிருக்கு ஒப்பற்ற நிலைப்பீடம், அன்புக் கடல், குறையாத ஒளி,அருளுள்ள ஆண்டவர் என்றெல்லாம் போற்றுகிறார். உலகில் சிறந்தவை எவையென்று பட்டியலிட்டு அவற்றையெல்லாம் இறைவனின் பண்பு நலன்களோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார்.*

தொடர்ந்து இறைவனின் பண்புநலன்களைக் குறிப்பிடும் முனிவர், இறைவன் சொல்லின் வழியாகவும் உள்ளத்தின் நினைவின் வழியாகவும் காண அடங்காதவனாய், எவ்வகையான ஒப்புமைக் கூட்டம் யாவற்றையும் வெல்லும் தன்மையும் உள்ள வல்லமை பொருந்தியவர் ஆண்டவர் என்றும், இறைவனின் கட்டளை என்பது ஒளியின் தன்மை யெல்லாம் கடந்து அறிவது என்றும் எடுத்துரைத்துள்ளார். இதனை,

*" சொல் வழியும் உள் வழியும் தொடர்ந்து அடங்காது, எவ் உவமைத் தொகுதி யாவும்*
*வெல் வழியும் ஆய வலி வேய்ந்த பரன் திருவுளம் ஆய், விகற்பம் என்னோ?*
*எல் வழியும் கடந்து அறிவான் ஏவலினால் இன்னல் உறாது" என்ப வானோன்,*
*கல் வழியும் கடந்து அனதிண் கன்னி அறா மணத்து இணங்கி, கடவுள் தாழ்ந்தான்"*
*( திருமணப் படலம்-38)*

என்று பாடியுள்ளார்.

கடவு என்ற சொல்லுக்கு வழி என்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி பொருள் சொல்கிறது. ( வுயஅடை டுநஓ்உழ௱இ ஏழட.ஐஐ) அனைத்தையும் கடந்து நிற்பவர் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. முனிவரும் இறைவன் யாவற்றையும் வெல்லும் தன்மை உடையவர் என்று குறிப்பிடுகிறார்.

கருணையின் வடிவம்

ஈறறம் பொருத்து படலத்தில் சூசை குறிப்பிடும் பேர்து, ' என் உயிருக்குத் தலைவனாகிய ஆண்டவன் குளிர்ந்த கருணையைச் செய்பவன் என்றும், களிப்பினைத் தருபவர் ஆண்டவர் என்றும் புகழ்ந்துரைக்கிறார்.

*"இளி செயும் என்று, இம்மணத்தை ஏவிய கால் வெரு உற்றேன்*
*நளி செயும் என் உயிர் நாதன்,நவை அறும் நனி கன்னிமையால்,*
*அளி செயும் என் கற்பு, இனிதாய் அளிப்பதற்கு அன்றோ மணம் ஆய்,*
*களி செயும் என் இறைவற்கு ஓர் கைம்மாறு எது? அறிகிலேன் யான்"*
*( ஈறறம் பொருத்து படலம்-21)*

மரியாள் அண்டவரின் அருளைக் குறிப்பிடும் போது, ' கனி, கரும்பு, கரும்பு பொழிந்த சாற்றால் அமைந்த கனிந்த வெல்லப்பாகு, கொம்புத் தேன், மது, உயிர்காக்கும் மருந்து, அமுது' என்றெல்லாம் குறிப்பிட்டு இவையெல்லாம் ஒன்றாகக் கூடினாலும் ஆண்டவரின் அருளுக்கு ஈடாகுமா? ஆண்டவரின் அருளுக்கு உவமையாகக் கூடிய பொருள் இவ்வுலகில் உண்டோ? என்று கேட்கிறாள். இக்கருத்தினை,

*" கனியோ? கழையோ?கழை கான்ற கனிந்த பாகோ? கோல் தேனோ?*
*நனி ஓகையினால் கூட்டியது ஓர் நறவோ? உயிர் செய் மருந்தோ? வான்*
*தனிலோ வழங்கும் அமுது என்றால், தகுமோ எந்தை அருட்கு இவையே?*
*இனி ஓர் உவமை ஈங்கு உண்டோ?" என்றாள் வழுவா மறை மொழியாள்.*
*( ஈறறம் பொருத்து படலம்-50)*

எனும் பாடலில் அறியலாம். ஆண்டவரின் அருளுக்கு உவமையாகக் கூடிய பொருள் இல்லை என்று குறிப்பிடுவதை,

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது ( திருக்குறள்-7 ) எனும் குறளோடு ஒப்பிட்டு நோக்கலாம்.

**அருள் வடிவமானவர்**

காப்பியத்தில் பன்னிரண்டாவது படலமாகிய மகனேர்ந்த படலத்தில் இறைவனின் பண்புநலன்களை உரைக்கும் போது,

*" விண்ணும் மண்ணும் பொது அற்று விதித்தும், அருளால் புரிந்து அளித்தும்*
*எண்ணும் எள்ளும் நீத்த குணத்து இருமை ஏந்தும் எனை ஆள்வான்,*
*கண்ணும் கையும் அருள் புரிய, கருணைக் கடலோன், புறத்து ஏகி,*
*மண்ணும் விண்ணும் உவந்த நிலை வகுத்ததற்கு ஆற்றா பா நிலையே"*
*( மகனேர்ந்த படலம்-5)*

என்று பாடுகிறார்.

ஆண்டவர் விண்ணுலகையும் மண்ணுலகையும் தானே படைத்தும், கருணையால் விருப்பத்தோடு காத்தும், எண்ணிக்கையும் இகழ்ச்சியும் இல்லாத அரிய குணங்களோடு பெருமை கொண்டவனும், என்னை அடிமையாகக் கொண்டு ஆள்வோனும், கருணைக் கடலாய் விளங்குபவனுமாகிய ஆண்டவன், தன் கைகளிலும் கண்களிலும் அருளைப் பொழிபவனாக இருப்பவன் என்று இறை இயல்புகளை எடுத்துரைக்கிறார்.

இறைவனின் தோற்றம்

இறைமகன் இயேசுபிரான் அன்னை மரியாளிடம் தோன்றும் தோற்றத்தை வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார்.

' ஆண்டவர் மேகம் மூடி மறைத்த பகலவன் போலவும், மனித உடலில் பிறந்த ஆண்டவர் தன் முகத்தில் ஒளி வீசிய வண்ணம் உள்ளார். விண்மீன்கள் பொருந்திய முடியை அணிந்த தாயின் கையில் அமர்ந்து தோன்றினார். அத்தோற்றத்தை மலர்மேல் நின்ற தேன்துளி என்பதோ? ஒளி தோய்ந்த சங்கின் மேல் முத்து இருக்கும் அழகு என்பதோ? தேன் தோய்ந்த தாமரை மலருள் தங்கியஅன்னக்குஞ்சு என்பதோ? பொன்னின் மேல் இட்டு வைத்த பவளச் செப்பு என்பதோ?" என்ற கருத்தினை,

"கான் தோய் மலர் மேல் தேன் துளியோ? கதிர் தோய் வளை மேல் முத்து அணியோ?
தேன் தோய் கமலத்து அனப் பார்ப்போ? சீர் தோய் பொன் மேல் துகிர்ச் செப்போ?
மீன் தோய் முடி சூழ் தாய் கரத்தில் வேய்ந்தான், முகத்தில் வில் வீசி,
வான் தோய் முகில் தோய் சுடர் அன்ன, மனுவின் உடல் தோய்ந்து உதித்த பிரான்"
( மகனேர்ந்த படலம்-6)

எனும் பாடல் மூலம் அறியலாம்.

தேவமைந்தனாகப் பிறந்த இயேசுபிரானின் தோற்றத்தைத் தேன் என்றும், முத்து என்றும், அன்னக்குஞ்சு என்றும், பவளச் செப்பு என்றும் முனிவர் பாராட்டியுள்ளதாகக் கருத முடிகிறது.

**முடிவுரை**

1. இறைவன் வல்லமை மிகுந்தவர் என்ற கருத்து உணர்த்தப்பட்டுள்ளது.
2. இறைவனைச் சரணடைந்தவர்கள் உயர்வான நிலையை அடைவார்கள் என்ற உண்மை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
3. இறைவன் உயர்பண்புகளைப் பெற்றவன் என்ற கருத்து பெறப்பட்டுள்ளது.
4. இறைவன் கருணை வடிவமாகவும், அருள் வடிவமாகவும் திகழ்பவன் என்ற உணர்த்தப்பட்டுள்ளது.
5. இறைமைந்தனாக இறைவன் பிறந்த போது அவரது தோற்றம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**துணை நூல்கள்**


1. பேராசிரியர் வி. மரியஅந்தோணி, வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணி முதற் காண்டம், வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம், தூய சவேரியார் கல்லூரி, பாளைங்கோட்டை,
2. டாக்டர் மு.வரதராசனார், திருக்குறள் தெளிவுரை, கழக வெளியீடு, சென்னை 18.
3. தமிழ் வரலாற்றில் கிறிஸ்தவம், உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை, முதல் மாநாட்டுக் கருத்தரங்கின் கட்டுரைகள், வேலூர்.


********* ********* ********** ********* ********* ********** ********** **********